**07.03.2024**

**HMOP. No. 60 / 2023 எ.ம.சா. 1 நாகம்மை, க/பெ. நாச்சியப்பன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும் , மனுதாரர் நாச்சியப்பனுக்கும் 11.02.2005-ல் திருமணம் ஆனது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பிருந்தே மனுதாரர் வெளிநாட்டில் பார்த்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு எங்கள் வீட்டிலிருந்து கொண்டுவந்த நகைகள் என்னிடம்தான் உள்ளது என்றால் இல்லை, பட்டமங்களத்தில் உள்ள வீட்டின் பீரோவில் உள்ளது. அதன் சாவி என்னிடம் உள்ளதென்றால் என்னிடம் ஒன்று , என் கணவரிடம் ஒன்று உள்ளது. திருமணம் முடிந்து என் கணவர் மனுதாரர் இந்தியாவில் 55 நாட்கள் இருந்தார் என்றால் சரிதான், 2 மாதங்கள் இருந்தார். இந்த 55 நாட்களும் நான் அவருடன் சுமூகமாக குடும்பம் நடத்தாமல், கணவன் என்ற முறையில் மனுதாரரை கவனிக்காமல் சண்டையிட்டுக்கொண்டு வந்தேன் என்றால் இல்லை. அப்பொழுதும் மனுதாரர் குடும்பத்தினருடன் நான் சுமூகமாக இல்லாமல் சண்டையிட்டுகொண்டு இருந்தேன் என்றால் இல்லை. எங்களுக்கு முதல் குழந்தை பிறக்கும்போது மனுதாரர் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். அப்பொழுது மனுதாரர் வீட்டில் நான் இருந்தேன் என்றால் இல்லை, என் கணவர் சொன்னதின்பேரில் என் அம்மா வீட்டில் இருந்தேன், அவ்வப்போது என் மாமியார் மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து செல்வார். நான் அப்பொழுது என் பெற்றோர் வீட்டில் இல்லை, மனுதாரர் வீட்டில்தான் இருந்தேன். மனுதாரர் தனது தாயாருக்கு பணம் அனுப்பி என்னை மருத்து பரிசோதனைக்கு அழைத்து செல்ல சொன்னதன்பேரில் அழைத்து சென்று நன்றாக பார்த்துக்கொண்டனர், நான்தான் அவர்களுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தேன் என்றால் இல்லை, என் 2-வது நாத்தனார் கர்ப்பமாக இருந்ததால் இருவரும் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது என்பதால் நான் என் அம்மா வீட்டில் இருந்தேன். முதல் குழந்தை பிறந்த பிறகு குழந்தைக்கான சீர்வரிசை செய்து மனுதாரர் வீட்டிற்கு அழைத்து வந்தனர் என்றால் சீர்வரிசை எதுவும் செய்யவில்லை, அப்போது மழையாக இருந்ததால் என் பெற்றோர்தான் அழைத்துக் கொண்டுபோய்விட்டனர், டாக்சிக்குரிய கட்டணத்தை எல்லாம் என் மாமியார் தரப்பில்கொடுத்தனர். குழந்தைகளுக்கு சீர் செய்யவில்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு எத்தனை நாட்கள் மாமியார் வீட்டில் இருந்தேன் என்றால் 2, 3 நாட்கள் இருந்தேன். அந்த 2,3 நாட்களும் என் மாமியார் குடும்பத்துடன் ஒத்துப்போகாமல் சண்டையிட்டுக்கொண்டு

என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, எங்களுக்கு ஒத்துப்போகாததால் என் கணவர்தான் தான் வந்தவுடன் வந்துகொள்ளலாம் என்று என் அம்மா வீட்டிற்கு போகச்சொன்னார். திருவிழா காலங்கள் போன்றவற்றிற்கு என் மாமியார் வீட்டிற்கு வந்தாலும், நான் சண்டையிட்டுக்கொண்டுதான் செல்வேன் என்றால் இல்லை. என்னை துபாய்க்கு அழைத்து செல்ல வேண்டுமென நான் என் மாமியாரையும், என் கணவரையும் தொல்லை செய்தேன் என்றால் இல்லை. அவ்வாறு தொந்தரவு செய்யும்போது மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தீ வைத்து தற்கொலை செய்துகொள்ளப்போவதாக மிரட்டினேன் என்றால் இல்லை. அதனை என் மாமியாரும், 2-வது நாத்தனாரும் தடுத்தார்கள் என்றால் இல்லை. என் கணவர் 2007-ல் செப்டம்பர் மாதம் வெளிநாட்டில் இருந்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு வந்தவர் குழந்தைக்கு விளையாட்டு சாமான்களை வாங்கிவந்தார், நான் அவரை குழந்தையுடன் சந்தோசமாக இருக்கவிடாமல் தடுத்து விட்டேன் என்றால் இல்லை, என் கணவர் வாங்கிவந்த விளையாட்டுப்பொருட்களை தன் மகளின் குழந்தைக்கு வேண்டுமென்று என் மாமியார் வைத்துக்கொண்டு என் குழந்தைக்கு கொடுக்கவில்லை. அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. 2007, நவம்பரில் என்னை துபாய்க்கு அழைத்து சென்றுவிட்டார் என்றால் சரிதான். துபாயில் இருக்கையில்தான் 02.08.2008-ல் 2-வது பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அங்கு அழைத்து சென்றபோது எங்கள் வீட்டில் போட்ட நகைகளை என் கணவர் முழுவதுமாக மாற்றிக்கொடுத்தார் என்றால் இல்லை, 1-1/2 பவுன் வளையலை 3 பவுன் நகையாக மாற்றிக் கொடுத்தார். எனக்கு போட்ட நகைகளை 22 காரட்டாக மாற்றிக் கொடுத்ததுடன், கூடுதலாக 50 சவரன் நகையும் எனக்கு வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை. வெளிநாட்டிற்கு அழைத்து சென்ற பிறகும் மனுதாரர் என்னை நன்றாக கவனித்துக்கொண்டும், ஆனால் நான்தான் கணவர் என்ற முறையில் நன்றாக கவனிக்காமல் தனது அம்மா வீட்டிற்கு அவர் பணம் கொடுப்பதையும் , செய்வதையும் தடுத்து வந்தேன் என்றால் இல்லை. 2008-ல் நான் வெளிநாட்டில் இருந்தபோது என் தகப்பனார் இறந்துவிடவே என் கணவருக்கு விடுப்பு கிடைக்காததால் நானும், என் குழந்தைகள் மட்டும் இந்தியா வந்தோம் என்றால் சரிதான். அதன் பின்னர் 2010-ல் என் கணவர் இந்தியா வந்தார், அதுவரை நான் என் அம்மா வீட்டில் இருந்தேன் என்றால் என் அப்பா இறந்ததற்கு ஏன் பணத்தை செலவு செய்து கொண்டு வந்தாய் என என் மாமியார் திட்டி இங்கேயே இருக்க செய்து விட்டார், காரைக்குடியில் எங்களுக்கு வீடு பார்த்து அங்கு குடித்தனம் வைத்து பெரிய பிள்ளையை பள்ளியில் மாமியாரும், நாத்தனாரும் சேர்த்துவிட்டனர். குழந்தைக்கான பள்ளிக் கட்டணம், வீட்டு வாடகை , பொருட்கள் அனைத்தையும் என் மாமியாரே வாங்கிக்கொடுத்து செலவு செய்தார் என்றால்

பொருட்கள் அனைத்தையும் வாங்கிக்கொடுக்கவில்லை , என் கணவர் அனுப்ப அதனை செலவு செய்தார். நான் அந்த 2 வருடம் என் மாமியார் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் செல்வதற்கு அனுமதிக்கவில்லை. நான்தான் அவர்கள் அனுமதித்தும் அங்கு செல்லவில்லை, அதனால்தான் எனக்கு தனியாக வீடு பிடித்து குடிவைத்தும் நான் அவர்களுடன் சண்டைபோட்டுக்கொண்டிருந்தேன் என்றால் இல்லை. 2010-ல் என் கணவர் இந்தியா வந்தபோது அவர் தன் தாயாருக்கும், தன் சகோதரிக்கும் பணம் கொடுப்பதையும், உதவி செய்வதையும் தடுத்து , சண்டை போட்டு, கத்தியால் என் கணவரை குத்தி கொலை செய்துவிடுவதாக மிரட்டினேன் என்றால் இல்லை, 2010-ல் என்னை வெளிநாட்டிற்கு அழைத்து சென்றார். என் சகோதரருக்கு உதவி செய்வதற்காக ரூ.85,000/- என் கணவர் என் அப்பாவிற்கு கொடுக்க , என் அப்பா என் பெயரில் தான செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். இதுபோக வேறு சில சொத்துக்களை என் கணவர் வாங்கியிருந்தார் என்றால் சரிதான், அவர் பெயரில் வாங்கியிருந்தார். அந்த ஆவணங்கள் முழுவதும் மனுதாரரின் குடும்பத்தில் அவரது தாயாரிடம் இருந்தது என்றால் சரிதான். என் கணவர் வெளிநாட்டில் இருந்தபோது நானும், என் அம்மாவும் என் மாமியாரிடம் சண்டை போட்டு அந்த ஆவணங்களை வாங்கிக்கொண்டு வந்துவிட்டோம் என்றால் இல்லை. அதன் பிறகு மனுதாரர் என்னிடம் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி நான் அவரிடம் சண்டையிட்டுதான் அந்த ஆவணங்களை திரும்பக் கொடுத்தேன் என்றால் இல்லை. இந்தப் பிரச்சனையில் நான் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்து மனுதாரரை மிரட்டினேன் என்றால் இல்லை. 2010 முதல் 2017 வரை நான் இந்தியாவில் இருந்தேன் என்றால் இல்லை, 2010-ல் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டு ஒவ்வொரு வருடமும் விடுமுறைக்கு இந்தியாவிற்கு வருவோம், இறுதியாக 2021-ல் இங்கு வந்தோம். 2010 முதல் 2017 வரை இந்தியா வந்தபோது நான் மனுதாரரின் தாயார் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் என் கணவர் அவரது அம்மாவுடன் சண்டைபோட்டுக்கொண்டதால் 2015 வரை செல்லவில்லை, அதன் பிறகு சென்றேன். 2017 வரை அங்கு செல்லாமல் வழக்கிற்காக சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2019-ல் என் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்துக்கொண்டிருந்த இடத்திற்கு நான் சென்று அங்குள்ள பெண்களுடன் என் கணவரை தொடர்புபடுத்தி தவறாக பேசி , சண்டையிட்டு என் கணவரை அசிங்கப்படுத்தினேன் என்றால் இல்லை. அங்கு சண்டையிட்டதால் மனுதாரர் போலிசில் சொல்லி போலிசார் வந்து விசாரித்தனர் என்றால் சரிதான், என் கணவர் அங்கு ரூமில் 2 நாட்களாக இருந்துகொண்டு வீட்டிற்கு வரமாட்டேன் என்று சொன்னதால்தான் நான் அங்கு கூப்பிட சென்றேன், சண்டை போடவில்லை.

காவல்துறை விசாரித்து இனிமேல் அது போல் நடந்துகொள்ளகூடாது என இருவருக்கும் அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர் என்றால் சரிதான். 2019–ம் ஆண்டு 15 நாட்கள் விடுமுறையில் டிசம்பர் மாதம் நான் இந்தியா வந்தேன் என்றால் சரிதான். அப்பொழுது என் மாமியார் வீட்டிற்கு நான் வந்தபோது நான் மனுதாரரோடும், அவரது தாயாரோடும் சண்டை போட்டுக்கொண்டு நான் மனுதாரரின் கையை கடித்துவிட்டேன் என்றால் இல்லை. 2020–ல் கொரானா காலத்தில் துபாயில் என் 2–வது மகள் பெரிய பெண் ஆகிவிட்டார் என்றால் சரிதான். அந்த காலகட்டத்திலும் நான் விழாவினை சிறப்பாக செய்யவேண்டும் என்று மனுதாரரிடம் சண்டையிட்டேன் என்றால் இல்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**